# பாவம் மக்கள்

சிற்பி வெளியீடு



"அந்தக் கல்லறைகள் பேசுவது
இந்தக் கயவர்களுக்கு,
புரியுதேயில்லை.
ஆதலால், நாளைய கல்லறைகள்
சற்று பேசவேண்டியுள்ளது."

# ஒரு கணம்...

நெஞ்சக் குழிக்குள்
எரியும் நெருப்புத் துண்டங்கள்
எண்ணக் குவியல்களாய்
எழுத்து வடிவில்......

தமிழ் ஈழம் தலைகுனிகிறது.
தத்துவ வித்தகன் தஞ்சம் தேடுகிறான்
தன் சொந்தக் கருத்துக்கள்
காலில் மிதிபடும் நிலைகண்டு.

வெற்றுக் காகிதங்களில் பூசிடும்
சிவப்பு மை கண்டு
உண்மைச் சாயத்தை
உரைத்திட எழுந்தோம்.

இது சதியல்ல......
சிலர் கூறுவார்கள் வாசித்தபின்
இது சி. ஐ. ஏ; மொசாத்......
இன்னும் பற்பல.

அப்படி எதுவுமேயில்லை.
''ஆற்றாமையின் வெளிப்பாடே''......
எண்ணத்துளிகளாய்
சிந்திடும் கவிதைகளாய்.
இதில் உள்ளது உங்களை
உறக்கத்திலின்று எழுப்பவே.

வெற்றுக் காகிதங்கள்
வீணர்கள் விளையாட்டு--என்று
சொல்வீர்களாயின்......
நாங்கள் பரிதாபப்படுகிறோம்.
உங்கள் அறியாத நிலைகண்டு.
விமர்சிக்கிறோம்
எண்ணக் குவியல்களாய்.
போர்த்திருக்கும் போலி வேசம்
களைவதற்காய்.

சற்றே உலகத்தை நோக்குவதற்காய்.
சிந்தித்து தெளிந்து
முற்போக்குப் பாதையில் போராட்டத்தை
முன்னெடுக்கவே இந்த
**ஆற்றாமையின் வெளிப்பாடுகள்**

திருமலையில், வவுனியாவில்
எல்லையெங்கும் மரண ஓலங்கள்.
இங்கு எம் உள்ளத்தில்

ஊமை ரணங்கள்.
ரணத்தின் வேதனை
உடலைப் பிழிகிறது

ஒரு புறம் புரியாதவர்.
ஒன்றுமே தெரியாதவர்.
தெரிய வேண்டுமெனவும்
சிந்தியாதவர்

மறுபுறம் மரணங்கள்.
இரண்டையும் உணர்ந்து
உணராதவர்களுக்கு உணர்த்திடவே
**உள்ளத்து ஊமை ரணங்களிலிருந்து**
உங்கள் கரங்களில்
**பாவம் மக்கள்.**

★ ★ ★

# "...வரலாறு தோற்பதில்லை"

கால நியதியின் மாறுதல்
இந்தக் குட்டித் தீவிலும்--அது
நிகழ்ந்தது

எவருமே எதிர் பார்த்திருக்காத மாறுதல
காலம் காலமாக அடக்கப்பட்டவர்கள்
தினம் தினம் நசுக்கப்பட்டவர்கள்.
ஒடுக்கு முறை விலங்கை
உடைத்தெறியப் புறப்பட்டார்கள்
அநுபவமில்லாதவர்கள் விளைவுகளை
அநுபவமாக்கினார்கள்

அதில் சிலர்;
ஆயுதங்கள்! ஆயுதங்கள்!! ஆயுதங்கள்!!!
விளைந்தது யூலை, 83

பார்த்திருந்து வலை விரித்தது
முதலாளித்துவம்.
பயிற்சிகள்! ஆயுதங்கள்!! புகலிடங்கள்!!
வெற்று மார்க்சியம் பேசியவர்கள்
பூசினார்கள் சோசலிச முலாம்.
ஆரம்பங்கள்;
மக்கள் அறியாதிருந்த போது
போராளிகள் சக தோழர்களால்
படுகொலை.
பின் வெளிப்படையாக
இறை. உமை, தேவன், மனோ மாஸ்டர்

..........................................................................................................

..........................................................................................................

அறியாது பல தோழர்கள் புதைக்கப்பட்டனர்
விரக்தியுற்றனர் விரைந்தோடினர்;
பலர் களத்தை விட்டு.
சிலர் மண்ணோடாயினும்
''உண்மை வெல்லட்டும்''
என்று பூண்டனர் போர்க்கோலம்

விளைவு
'புதியதோர் உலகம்','தீப்பொறி'......
பொறுக்குமா முதலாளி வர்க்கம்?
நசுக்க எடுத்தனர் முயற்சிகள்
பலன் சிலரைக் காணவில்லை.

இது மட்டுமா?
இனவெறியின் போலிமுகத்திரை
கனையப்பட்டுக் கொண்டிருந்த நேரம்

ஓ... அந்த அநுரதபுரம்.
ஆயுதமேந்திய அரைகுறைகளால்
அறுக்கப்பட்டனர் அப்பாவி மக்கள்
தென்திசையில்.

போராட்டத்தை அடகு வைத்தார்கள் என்று
மற்றவர்களைச் சுட்டி
மீள முடியாத படுகுழிக்குள்
ஈழ விடுதலையைத் தள்ளினான்
'மானமுள்ள தமிழன்'.

அராஜக வாதிகள்
ஈழமெங்கும்
கொள்ளை, கொலை, கடத்தல்.
தனிநபர் செய்தால்
'மின் கம்பம்...........'
இயக்கங்களாயின்
விடுதலைத் தயாரிப்பு?
விளங்காது கலங்கலுற்றனர்
தமிழ் மக்கள்.

ஒன்றும் புரியவில்லை
எதுவுமே தெரியவில்லை.
தெரியவும் விடவில்லை-இயக்கங்கள்.
எங்கே, எங்கே? எப்போது, எப்போது?
எதுவுமே தெரியாமல்
எதுவுமே புரியாது
அற்ப ஆசைகளை நெஞ்சில் புதைத்து
நப்பாசையுடன் நோக்கலுற்றனர்
பேச்சு வார்த்தை.

ஓ... ஈழம் சகதிக்குள்.
தாளமுடியாது எழுச்சி கொண்டவர்களுள்
காணவில்லை சிலரை.
சிலர் மறுபடியும் கைகட்டி விட்டனர்.
சிலர் நெஞ்சக் குழிக்குள்
நெருப்புத்துண்டங்கள்.
கக்கினர். கக்குகின்றனர்.
இறுதியில் அதுவே அவர்களின்
முடிவென உணர்ந்த பின்பும்
மூலாம் பூசுபவர்களின் முகத்திரை
கிழிக்க.........

சிங்கள சிதைவுகளில்
சிவப்பு மலர் தேடப் புறப்பட்டவர்களுக்கு
சொந்தக் கரங்களை ஒடுக்க முனைபவர்களுக்கு
ஒன்று சொல்வோம்
மனிதர்கள் தோற்கலாம்
**"வரலாறு தோற்பதில்லை"**

★ ★ ★

# ‘தென் திசைத் தோழனுக்கு..’

அன்பு தோழ!
கவிநுறு மதியமொன்றில்
கடைதனில் பொருட்கள் வாங்கி
வீடுதனை நோக்கிச் சென்ற போது
விளம்பினர் ஓர் சேதி
அநுரத புரத்தில் இருநூறு...
நான் முதலில் நம்பவில்லை, ஆயினும்
தெரியும் இவர்கள் செய்வாரென.

தன்னினத்துள்ளேயே இன்று
கொள்ளை, கொலை, கடத்தல்.
அறிந்தும் தெரிந்திருந்தும்
அறியாதது போல் மறைக்கிறோம்
நாங்கள்.

ஆயுதங்கள் எதற்காகவென
புரியாத கூட்டத்தின்
அட்டகாசத்தை தாங்காது.

தோழ!
இங்கே நாங்கள் சிலர்
விழித்திருக்கிறோம்.

ஆம் தோழ!
இங்கேயும் உங்கள் நண்பர்கள்
மௌனித்திருக்கிறோம்.
காரணம் உனக்கும் புரியும்.
நீ அந்த மௌனத்தை தவறாகப்
புரியக் கூடாதென்று வரைகிறேன்
இம் மடல்.

ஒடுக்கப்பட்டவர் பொங்கி எழுந்தனர்
அதை நசுக்க எழுந்தது
முதலாளி வர்க்கம்.

ஏன்? எதற்கு என்று தெரியாமல்
ஏந்த வைக்கப்பட்டது ஆயுதம்.
விளைவு அநுரதபுரம் மட்டுமா?
வெற்று வார்த்தைகளுக்கும்
சிவப்புச் சாயம் பூசுபவர்கள்
தேடுகிறார்கள் வர்க்கப்புரட்சிக்கு
சிங்கள ரத்தம்.

ஒருங்கே குரல் கொடுப்போம்
நாம் இணைந்து உலகெங்கும் அதிர

புரியாது செயல் புரிபவர்க்கு
''உங்கள் பாஷையில் ஆயுதங்கள்
புனிதமானவை தான். — அவை
எவருக்கெதிராக என்று
இனங்கண்டு பாவிக்கப்படும் போது தான்'' .....

அட்டைகளில் சொற்களில்
சிவப்பு சாயம் பூசி
'மார்க்சின் மைந்தர்கள் நாம்--என
மார்தட்டினால் மட்டும் வந்துவிடாது
மானிட விடுதலை.'

''**மக்கள் விடுதலை**யை வென்றெடுக்க
அழிப்புகளை நிறுத்தி அணிதிரளுங்கள்
சரியான திசையில்.''

★ ★ ★

# "நாங்கள் பரிதாபப்படுகிறோம்..."

எத்தனை இழப்புக்கள் தொடரினும்
சிந்திய குருதித் துளிகளால்
செம்மலர் எழுந்தே சிரிக்கும்
கதிரவக் கதிர்களால்
பனித்துளிகள் அகல
மூச்சுவிட நிமிர்ந்த செம்மலர்கள்
முளையிலேயே கிள்ளப்படும் கொடுமை
நிமிர்ந்து பார்க்குமுன் முறிக்கப்படும்
மொட்டுக்கள்.

வரலாற்றுத் திசை நோக்க
சற்றே விரித்த இதழ்கள்
சிவக்குமுன் உதிரத்துளிகளால்
உடலெல்லாம் சிவக்க

கொஞ்சிய மழலை கொடூரமாய்ச்
சிதைபடும்--கொடுமையை எண்ணுமுன்.
இரத்தாற்றில் நீந்தி கரையைத்
தேடுமுன் தனியே கிடக்கும்--
தலை, மார்பு, கை...........
துடிப்பாய்ப் பயன்படுத்த முனையும் போது
எட்டிப்பிடிக்க தன்கையில்லை
என்ற உண்மை உணர்வு
உறைத்திடும் போது.
சற்று முன் நிகழ்ந்த கொடுமை
படமாய் நெஞ்சில்.........
அதை நிகழ்த்தியவர்களின்
புத்தகங்களில் கொட்டை
எழுத்துக்களில்
''.......................................எமக்கு எதிரிகளல்லர்.''
? ! ..................... ? ! ............................ ? !
மார்க்சின் மைந்தர்கள் என்றும்,
தார்மீகக் காவலர்கள் என்றும்,
மார்தட்டியவர்கள்
கண்முன்னால் மனைவியை, பிள்ளையை
சீரழித்த கொமையினை .....? !
''இங்கு அரசின் அக்கிரமங்களுக்கு
முடிவுகாண கரங்களை அவர்களோடு
இணைத்து உயர்த்துவோம்.''
என்று கூறியவர்களை ...... ? !
**நாங்கள் பரிதாபப்படுகிறோம்;**
**அவலங்களை எண்ணியல்ல**

அதை நிகழ்த்தும்
அறியாதவர் நிலைகண்டு.
பகடைகளாய் தாம் பயன்படும்
நிலைபுரியாது குரூரக்களிப்பில்
திளைப்பவர்களுக்கு கூறுகிறோம்-
'எத்தனை இழப்புகள் தொடரினும்
சிந்திய குருதித் துளிகளால்
செம்மலர் எழுந்தே சிரிக்கும்.'

நாங்கள் பரிதாபபபடுகிறோம்
நீங்கள் நிகழ்த்தும் அவலங்களை எண்ணியல்ல
அதை நிகழ்த்தும் உங்கள் நிலைகண்டு

★ ★ ★

# ஓ... அந்த அநுரதபுரம்.

நுனிப்புல் மேய்ந்த மார்க்சியப்
பண்டிதங்கள் கூறுகிறார்கள்
தொழிலாளி, பாட்டாளி, வர்க்கம்
சொற்கள், எண்ணங்கள், செயல்வடிவங்கள்
தத்துவவித்தகனை தலை குனிய
வைக்கின்றன.
தன்னினத்துள்ளே ஏழ்மைச்
சகோதரனை, சக தோழனை
சமூகவிரோதி; உளவாளி........

வர்க்கப் போராட்டம் கூறியவர்கள்
வதைக்கின்றனர் வியர்வைச் சுவடுகளை.
அப்பாவிகள் அலறினர்
அந்த மதிய நேரத்தில்
கடையெங்கும், தெருவெங்கும்
வழமைபோல் பரபரப்பான

அந்நேரம்.
வேட்டொலி கேட்டு ஓடினர்—சிலர்
கேட்டுமுடியுமுன் மடிந்தனர்—பலர்
கணநேரத்தில்.

மடிந்துபோன **மார்க்சின் சுவடுகளை;**
எஞ்சிய எச்ச சொச்சங்களும்
அழிந்து போனதென போதிமரம் காட்டி
நின்றது தன்கன்னத்தின் காயத்தில்.

## ஓ··· அந்த அநுரதபுரம்.

முடிந்ததா கலர்ப்புரட்சி காட்டுபவர்களின்
ஆட்டம். அவலங்கள் தொடர்ந்தன
மேனியெங்கும் குருதி வெள்ளம்
வழிந்தோட **"மகே அம்மே!"**
முடியவில்லை சாக
யுக வேதனைகள்
பாஷிச வெறியர்க் கெதிராய்
போர்முரசு கொட்டியவர்கள்
கிழித்தனர் ஆடைகளை
புவிப்பரப்பில் வானமே ஆடையாக
ஆண், பெண், குழந்தைகள்.
உடம்பில் இரத்தம் ஊற்றெடுத்தது.
அறுந்த உறுப்புக்கள், கொடூரச்சிதைவுகள்.

ஆடைகளால் மறைக்கப்பட்டவை
அருகிலிருந்த பிய்ந்த துணியின்மேல்...
தப்பிய ஓர் மழலை பால் குடிக்கத்
தன் தாயின் மார்பைத்தேடியது
அங்கு இரத்தத்தில் நனைந்தது
ஆறியது தன் பசி.

"உலகத்தில் பிறந்து இப்படியும் இருக்கிறதா"
என அது நினைத்தது நெஞ்சம்
கலங்குமுன் அதையும் சிதைத்தனர் அவர்கள்

எல்லைகளில் அகதிகள்
ஓடினர் ஓடினர்
**அம்மா! அம்மா!!**
மறுபுறம் அரக்கர்களின் அவலங்கட்கு
ஆற்றாது ஓடினர்.
மண்ணெங்கும் வியர்வையோடு
குருதியின் மணம்
இனவேறுபாடின்றி இரத்தமும்
கலந்ததங்கு.

**உலகப் புரட்சியின் ஒரு பகுதி**
ஆவலுடன் எதிர்பார்த்த
மானுடவாதிகள்
திகைத்தனர், திடுக்கிட்டனர்.
... ......அந்த அழிவுகளால்;
நிதர்சனமாகுமென காத்திருந்த
இலட்சியங்கள்;
இப்போது தூரத்திலே, வெகுதொலைவிலே
புள்ளியாய்......
நெருங்கலாமென துளிர்க்கிறது நப்பாசை
புரியாத பேதையர்க்கு புரியவைக்க ...
**'ஓ... அந்த அழிவுகள். அவை**
**எம் அழிவின் விளிம்புகள்**
**நிறுத்துங்கள் அதை.'**

# சாமத்துக் கோழிகள்.

போராட்டம், போராளிகள்.
புரட்சி, விடுதலை.
என ஓயாது வாய்கூசாது
கூவும் **சாமத்துக் கோழிகள்.**

விடிவது தன்னாலென என்னும்
நினைப்புக்கள் .........
இதில் வியப்பென்னென்றால்
விளைவதும் உன்னாலென்றால்
இல்லை.
மக்களால், எம் மக்களால்--என
ஓயாது, வாய் கூசாது கூவும்
**சாமத்துக் கோழிகள்.**

போராளிகள் படுகொலைகள்
போராட்டத்திற் கொல்வாதெல

ஓயாது வாய் கூசாது கூடிப
**சாமத்துக் கோழிகள்.**

கல்லறைக்கு கணக்குக் கேட்டால்
கூசாது, வாய் பேசாது
மெல்லப் பொசுக்கிடும்
**சாமத்துக் கோழிகள்.**

ஓ இவைதான் புரட்சிகர முன்னோடிகள்
விடிவது தன்னாலென எண்ணும்
**சாமத்துக் கோழிகள்.**

★ ★ ★

# விடுதலைப் பாதை.

கிடங்கு பள்ளம் தெருவெங்கும்
கல்லுத் தெரியும் பாலம் உடைந்த வீதியில
ஏ. கே. ஏந்தி ஏசிப்பறித்த வானில்
வீரசாகசங்கள் புரியும், எம் இளைஞர்க்கு
வரம்பிலா வீதிகள் தான் **விடுதலைப் பாதையோ.**

புரட்சி என எழுச்சி பொங்க
புலம்பிடும் புத்திரர்க்கு
விண்ணகத்து வீதியெல்லாம்
**விடுதலைப் பாதையோ.**

உள் நடக்கும் முரண்பாடுகள்
அத்தனையும் சீர் திருத்தி—தூய
புதிய பாதை காண்பவர்க்கு
மண் குழிதான் **விடுதலைப் பாதையோ.**

எத்தனைகளை பேசிப் பேசி
அத்தனைக்கும் முடிவுகாணாது
ஏமாந்த மக்களுக்கு
உண்மை சொல்ல விழைபவர்க்கு
கல்லறையின் பாதைதான் **விடுதலைப் பாதையோ**

இப்படியே பாதைகளின் தூரங்களை
ஆழங்களை அளவிடாதிருக்கும்
மக்காள் ஒன்று சொல்வேன்
எது நடப்பினும் எண்ணாதிருந்தோமாயின்
நம் அனைவருக்கும் பாதாளம் செல்லும்
வழிதான் **விடுதலைப் பாதை.**

★ ★ ★

# பாவம் மக்கள்

வெரித்தாஸில்.
''ஈழத்தமிழ் அகதிகள் துற்றுயர்தும் துயவலையும் நா
பி.பி.சி யிலும் அதே பல்லவிதான்
ஏதடா இது என்று எழுந்து சற்றுத்தூரம்
வெளியில் சென்றேன்.

[illegible] யாழ்நகர் நோக்கித்தான்
ஓ...... அப்பாடா எவ்வள நெரிசல்
ஸ்ஸ் ...... ஸ்ஸ் ...... அடாடா
நல்ல காலம் முத்தங்கொடுக்க வந்து
சற்று விலகி புழுதிப்படலம் மறைக்க
ஓடியது ஓர் வான்

''அப்படியான ...... '' முணுமுணுத்தனர் சிலர்
''இந்த நேரத்தில் இவைக்கு இப்படியொரு

ஓட்டம் கடத்தின வான், கொள்ளையடிச்ச
உசல், சேர்த்த பவுண் காசு இருக்குத்தானே
ஒருபக்கத்தாலும் விமோசனமில்லை.''
தொடர்ந்தனர்

**'பாவம் மக்கள்.'** எண்ணி,
நான் மேலே நடந்தேன்.

மூக்கைத் துளைத்தது
'கொலோன்' வாசனை.
அருகே ஒரு ஜோடி.
'டிஸ்கோ' தோடு, 'ஜூனி' சாறி,
'டெரிகாட்டன்' சேர்ட் 'கரா' ஜீன்ஸ்......
'வெரிதாளில் கூறியபடி ஒன்றையும்
காணோம்........'

சலங்கை ஒலி போன்று கேட்டது
சங்கீதச் சிரிப்பு.
கண்ணைக் கவரும் 'மெக்ஷி'
கைகளிலே 'வளையல்'
கால்களிலே 'ஹைகீல்ஸ்'
அங்கங்கள் இடையிடையே எட்டிப்பார்க்கும் ஓட்டை
ஓட்டை போட்ட சட்டைகள்.
பின்னால் 'பாம்பே ஜீன்ஸ்' சகிதம்
தாடி, தாடியற்ற நாகரீக இளைஞர்
கூட்டம் குலுங்கிச் சிரித்தபடி.........

பெருமூச்சு விட்டே திசையெல்லாம்
திரும்பிப்பார்த்தேன்
''வயது வந்தவர்களுக்கு மட்டும்''

அருகில் இயக்கங்களின் சுவரொட்டி
களோடு எட்டிப்பார்த்தன.

'தமிழ் மக்கள்'
உரிமை கொண்டாடியிருந்தனர்
பல சுவரொட்டிகளில்.
"இயக்கங்களே........."
காணப்பட்டன.

மேலும் நடந்தேன் யோசித்துக்கொண்டு
"...... ஒழிக,...... வேண்டாம்".
பார்த்தால் ஓர் ஊர்வலம் முன்னால்.
அருகிலிருந்தவரிடம் அலசிப்பார்த்தேன்
...எதிர்ப்பு ஊர்வலமாம்.

**இதுவென்ன? ரவுணில் அப்படியொரு**
**மாற்றமுமில்லை.**
**புதிதாய் முளைத்திருந்த**
**சில கட்டிடங்களைத் தவிர.**

மின்கம்பங்களிடையே துணிகள் கயிறுகளில்
'திறப்புவிழா' காட்டிக்கொண்டிருந்தன.

இளசுகளின் உரசல்கள் அதிகமாகவே
இப்போது
சற்றே நான் முட்டிவிட்டேன் ஒருவன்
மேல். முறைத்துப் பார்த்து முணுமுணுத்துச்
சென்றவனைக் கவனித்தேன்.
இடுப்பிலொரு 'வீக்கம்'

'பாலம் ஏதோ கட்டியாக்கும்
மூட்டியது நோகுதுபோல அதாலதான்
எசிக்கொண்டு போகுதுபோல'

அருகில் நின்றவர் சொன்னார்
''அதுகாணும் 'கிறனேட்' போறது
இயக்கப் பொடியள்''
நல்ல காலம்.

தினசரி ஒன்று வாங்கினேன்.
அதில் 'உருக்குமால, பணிவான.....
வேண்டுகோள்கள்'

ஓ வெளிதானில்ல சொன்னது
ஒருவகையில் சரிதான்.
**பாவம் மக்கள்.**

''சி.ரி.பி. பஸ் ஒன்றையும் காணேறம
மினிவான்களில் தாளைக் கொடுத்து
சில்லறை கேட்டால் இப்ப ஒரு ரூபா
கூடிப் போட்டுது.''
ஏறியமர்ந்த நான் கேட்ட வார்த்தை அது

இதெதெடா என்று பார்க்க
கையொரு பக்கம் கால் மறுபக்கம்
இரண்டிற்கும் நடுவில் இருவர்.
''பின்னுக்குப் போங்கோ''
கொண்டக்றர் கெட்டிக்காறன்.
பதினைந்து பேர் இருக்கவேண்டிய

வானில நாற்பத்தைந்து பேரென்றால்
சும்மாவா?

திடீரென ''சயிட் - சயிட்''.
முன்னாலொரு 'கொஸ்டா'
பின்னாலொரு 'டெலிக்கா'
''பெடியள்''.

சற்றுத்தூரம் விரைந்து சென்றதெமது வான்
''அடுக்கடி பிட்டி''— சடின் பிறேக்
''கண் மண் தெரியாமல் வாகனம்
ஓடினால் பிட்டியில்லாமல்
என்ன?''— அருகிலிருந்தவர்,

இறங்கி என் வேலைமுடித்து
ரவுணுக்கு மறுபடியும் வந்தேன்.
சனக்கூட்டம் ஒரு கம்பத்தைச் சுற்றி.
'சமூக விரோதி' உரிமை கோரப்படாது
கிடந்தது ஒன்று. இல்லைக் கிடந்தான்
ஒருவன்.

**பாவம் மக்கள்**
எனக்குள் நினைத்துக் கொண்டேன்.
மறுபடியும் நன்குய்ச் சுற்றிப் பார்த்தேன்
**'ரவுணில் அப்படியொரு மாற்றமுமில்லை.'**

வனிதயர், வாலிபர் இவர்களுடன்
வயோதிபரும் நடக்கின்றார் குறுவென.
ஆனால் ஒன்று முன்போல் புத்தம் புது

'பெண்ஸகாரில்' வருபவர்கள் இப்போது
பஸ்ஸில்
'கொண்டாவை' வீட்டில் வைத்துவிட்டு
'ஏசியாவில்'.
ஏனென்று கேட்டால்
'பொடியள் கண்டால் எடுத்துப் போடுவாங்கள்'

"டடி..." "ஓ டார்லிங்....."
குறைவில்லை யாழ்நகரிலே.
**வழமைபோல் எல்லாம் சி.ரி.பி. பஸ்களைத்**
**தவிர.**

புத்தம் புது ஹோட்டல்கள் 'புரியாணி', 'பன்பா'
விளம்பரம் காட்டின.
எதுவுமே தெரியவில்லை வித்தியாசமாய்.

ஓ... மினிசினிமா மூலை முடுக்கெல்லாம்.
மறந்துவிட்டேன் மாற்றத்தை.

பருத்த சேர்ட்டுடன் வான்களிலும்,
கொண்டாக்களிலும் கைகளில்
சில பொருட்களுடன்
இளைஞர்கள் நகருக்குள்ளே.

அதை விட ரவுணில் அப்படியொரு
மாற்றமுமில்லை.

சுற்றிப் பார்க்க மற்றுமொரு காட்சி
அகப்பட்டது கண்களில்.

"பிறகும் பூட்டானிலையாம்
இதொண்டும் சரிவராது பாருங்கோ"
கூட்டம் அலசியது அரசியல்பற்றி.

திம்புவில் நடக்கும் திருகுதாளப் பற்றி
ஒன்றுமே தெரியாது அகப்பட்டதை
அலசும் அவர்களுடன்
'ஹைறகியரில் பெண்ட் எடுக்கும்
புரட்சி வீரர்கள்' நிலை கண்டு
கூறி ஒருவன் சென்றான்.
**"பாவம் மக்கள்".**

கேட்டு நான் செல்லும்போது
"திருமலையில், வவுனியாவில் கள அழமை
எதிரில் வந்த இருவரை மறித்து
விபரம் கேட்டேன்.

**'லங்கா புவத்'** கூறியதாம்.
பன்னீராயிரம் சிங்களவர்
பத்தாயிரம் தமிழர் அகதிகள்.

**ஓ... புரிகிறது வெரிதாஸில்**
**சொன்னது இதைத்தான்.**

புரட்சி, விடுதலை என்ற சிகப்புச
கோஷங்கள் வெறுமையானதையெலா லா
நெஞ்சினில் விம்மி ரவுணைச் சுற்றிப்
பார்த்தேன்
**பாவம் மக்கள்.**

புரியாது, தெளியாது செல்பவர்க்கா.......
இல்லை எத்தர்களால் பலிக்கடாவாக்கப்படும்
மக்களுக்கா...............

**ஓட்டு மொத்தமாய்,**
**பாவம் மக்கள்.**

★ ★ ★

# 'புதுப் புரட்சி'

புரட்சி, புரட்சி எனப் புலம்புவர்
எழுச்சி, எழுச்சி எனப் பிதற்றுவர் - இனிமேல
புரட்சிகள் காற்றோடு காற்றாய்
நீரோடு நீராய்ப் போன பின்னர்
புதுப் புரட்சிக்காய் காத்திருக்கும்
ஈழத்து மாந்தர்.

வீதியெங்கும் புரட்சியின் நறுமணம்
பாதையெங்கும் புரட்சியின் சுவடுகள
ஈழவர் வாய்களிலே புரட்சியின் உச்சாடனம
இறுதியாய் புரட்சிகள்
காற்றோடு காற்றாய்
நீரோடு நீராய்ப் - போனபின்னே
புதுப்புரட்சிக்காய்க் காத்திருக்கும்
ஈழத்து மாந்தர்

# "....உங்களுக்காகவே"

வெலிக்கடை யில; வெங்கொடுமைச் சாக்காட்டில
குருதிமழையில் குளித்த அந்த செம்மலர்கள்,
வெள்ளித் தீயில் புடம் இட்டவர்களின்
வாரிசுகள் நடத்துகின்றன - இன்று
தங்காலை; வெலிக்கடை யில்...........

சிதைக்கப்பட்டவர்கள் உரமனங்கொண்டு
உருத்தெழுந்தனர் — 'உண்ணாவிரதம்'
ஐரிசில் 'பொபி சாண்ட்ஸ்'
ஈழத்தில் 'பொபி சாண்ட்ஸ்'கள்
ஒருவர், இருவராக கொய்யப்பட்டவர்கள் போக
ஏனையோர் தொடர்கின்றனர்
'சாகும்வரை உண்ணாவிரதம்''

'உலகத் தொழிலாளர்களே!' அறைகூவுகிறார்கள்
பூட்டிய சிறையில் புனித வேள்வி நடத்துபவர்கள்

மானுட வாதிகளே எழுங்கள்!
மரித்தவர்கள், மரிக்கப்போகிறவர்கள் அவர்களுக்காக
உலுத்தர்கள் சிலரின் உதையும் செயலைப் பொறுத்து
தம்மைப் புடமிடும் தோழர்களின்
நிலையை உணர்ந்து......

கூவுவோம் உலகதிர;
''பசித்த வயிற்றுடன் புசிக்கப் போகாது
வேகும் குடல்களால் உறுதி தளராது
பாஷிச வெறியரால் பலவந்தப்படுத்தப்பட்டு
பரிதவிக்கும் தோழர்களே,

**''நாம் இங்கு உங்களுக்காக
உங்களுக்காகவே......''**

எம்செயலை எள்ளி நகைப்பவர்
நிலைகண்டு,
அவர்களுக்காய் பரிதாபப்படுகிறோம்
பாவம் அவர்கள்
புரியாதவர்களுக்கு புரியவைக்க
எழுகிறோம் நாங்கள்.

**''நாம் இங்கு உங்களுக்காக
உங்களுக்காகவே''**

# எல்லைப் புறத்துக் கிராமங்கள் எரியும் நெருப்பில்...

கருத்துக்களின் குவியல்களை
படித்து முடித்த வேதனையில்
கண்களை மறைக்கும் நீர்த்திரையை
சுண்டியெறிந்து, "இப்படியுமா ........?
எண்ணிடும் நண்பர்களே
நீங்கள் இப்படியேயிருந்தால்
இன்னும் எத்தனையோ இதுபோல்
வேதனை சூழ்ந்த நெஞ்சத்திலுள்ள
நெருப்புக் குவியல்களின்
வெப்பம் தாங்காது
சொல்லி ஆறுதற்காய் மட்டுமல்லாது
பொல்லாக் கொடுமையை
முடிவுக்குள்ளாக்கவே.

'பாவம் மக்கள்' என்றெழுந்து
எத்திசையில் நோக்கினாலும்
யாழ் நகரில்
ஆங்காங்கே மினி சினிமா
கண்கவர் வண்ண ஆடைகளுடன்
இளைஞர், யுவதிகள், வயோதிபர்
உட்பட எதையுமே யோசியாது.

ஆனால் நம் எல்லைப்புறக் கிராமங்கள்
'எரியும் நெருப்பில்' — இங்கு
நம் நெஞ்சங்களோ எரிதணலில்......
வேதனை பிழிகிறது நெஞ்சை
'பாவம் மக்கள்'
பரிதவித்து நாம் கேட்கிறோம்
'யாரோ எவரோ எதையோ
தருவார் என்றெண்ணி

காணிப்பிரச்சனை, எல்லைப்பிரச்சனை
தீர்த்தால் போதும்' மலர்ந்திடும் ஈழமென்று
இன்னும் விலகி நிற்கும் மக்களே!
இங்கு நடப்பவை தெரியவில்லையா?
இல்லை உங்களுக்கு உறைக்கவில்லையா?

**நம் எல்லைப்புறத்துக் கிராமங்கள்**
**'எரியும் நெருப்பில்'** — அது மட்டுமா
இங்கு நம் நெஞ்சங்களோ
எரிதணலில்.

அடிப்படைப் பிரச்சனையை
ஆணிவேரோடு களைந்தெறிய

எழுந்த மான நடவடிக்கைகளை
அறவே நீக்கி காணுவோம் 'புதுயுகம்'

எம்மக்கள் குரல்வளை நெரிக்கவரும்
கரங்களை அறுத்திடுவோம்
ஆட்டங்காணவிளையும்
போராட்டத்திற்கு - எம்
கல்லறைகள் ஆகட்டும் அத்திவாரமாய்.

இனியாவது குறுகிய எண்ணங்களில்
குருட்டிச் சுகங்காணுவதை விடுத்து
எழுவோம். விடியலை நோக்கி
ஏனெனில்......

**நம் எல்லைப்புறத்துக் கிராமங்கள்**
**எரியும் நெருப்பில்**
**இங்கு நம் நெஞ்சங்களோ**
**எரிதணலில்.**

★ ★ ★

# போராடுவோம்....
# விழித்திருங்கள்

**ஓ மக்களே !....**
இன்னும் விழித்திருங்கள்
சிவப்பு முகமூடிகள்
புரட்சிக் கொடிகளுடன்
இன்னும் வருவார்கள்.

இனங்காணப்பட்டுவிட்ட
போலிவேடதாரிகளை
தூக்கியெறிந்துவிட்டோமென்று
எக்காளமிட்டுக்கொண்டு
உங்கள்
கால்களில் விழுந்து
மெல்ல நிமிர்ந்து

இடுப்பை அணைத்து
எழுந்து நின்று
உங்கள்
கழுத்தை நெரிக்கும்வரை
காத்து நிற்காமல்
இன்றே அவர்களை இனங்காணுக

**ஓ மக்களே ! . . . .**
விழிப்பாயிருங்கள்.
நடந்த பாதையை
திரும்பிப்பாருங்கள்.

எமது நிலத்தில்
நடக்கும் கால்களில்
சுடக்குலதெல்லாம்
விடுதலைக்காய் சென்ற எம
உடன் பிறப்புகளின்
எலும்புத் துண்டங்களும்
அவர்களின் உயிர்பறித்த
எம்மவரின்
துப்பாக்கிக் குண்டுகளும் தான்.

**ஓ மக்களே ! . . . .**
விழிப்பாயிருங்கள்
சற்று நில்லுங்கள்
சுற்றிப்பாருங்கள்.

**குமுதினி படகில்**
**குருதிநீர் வடித்த**

**இவர்களைப் போலத்தான்**
**ஹபரணையில், திருமலையில்**
**அநுரதபுரத்தில், வவுனியாவில்**
**அவலச்சாவை அணைத்த**
**அவர்களும் அப்பாவிகள் தான்.**

அப்படியானால்
அங்கிருந்து வந்த
இந்தக் கொலைஞர்களுக்கும்
இங்கிருந்து சென்ற
அந்தக் கொலைஞர்களுக்கும்
என்ன வித்தியாசம்?

**ஓ மக்களே! . . . .**
விழிப்பாயிருங்கள்
எமது வரலாற்றின்
புதிய பக்கத்தில்
மீண்டும் இங்கொரு
மாசுபட்ட அத்தியாயம்
மணமெடுக்கும் அவலத்தை
அனுமதிக்கமாட்டோம்.

கரங்களை எழுப்பி
குரல்களை உயர்த்தி
**ஓ மக்களே! . . . .**
உரக்கப்பாடுவோம்

''தெற்கிலும் நமக்கு நண்பர்கள்
வடக்கிலும் நமக்கு எதிரிகள்''

எம்மினமாயினும்
அந்நியனாயினும்
"நண்பரின் கரங்களை அணைப்போம்
எதிரியின் குரல்வளை நெரிப்போம்"

எம்மிடையே படர்ந்துவிட்ட
துன்பக் களையை
இலையாய்
பூவாய்
கிளையாய்
தண்டாய்
ஒடிக்க முனைந்த
அந்த வரலாற்றை மறப்போம்

**அனைத்துத் தளைகளையும்**
**ஒருங்கே சேர்த்து**
**வேரோடு மாய்க்க**
**இனியொரு போராட்டம் தொடுப்போம்.**

★ ★ ★

அடிமைக்குள் அடிமையிங்கே-நாம்
ஆகவே-போராட்டத்துள் ஒரு
போராட்டத்தையும்
புரட்சிக்குள் ஒரு புரட்சியையும்
செய்யவேண்டி வரலாறு
நிர்ப்பந்திக்கிறது''

அனுப்ப வேண்டிய முகவரி
No 322
கோவில் வீதி
நல்லூர்

"எம்மிடையே இன்னும் ஒரு
கும்பல் எஞ்சியுள்ளது
அது அவமானத்தை
தின்றுகொண்டிருக்கிறது
அவர்களின் பிடரியை
நிமிர்த்துவோம்
எதிர்ப்படும் ஒவ்வொரு கையையும்
நக்கும் ஒருவனை
எப்படி நம்மிடை
விட்டு வைக்கலாம்."

—பலஸ்தீன அடியிலிருந்து—

Rs, 5. 00